9th September 1970]

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) வும் (இ) யும்: திருவாளர்கள் எஸ்கார்ட்ஸ் நிறுவனத்திற்கு பேசின் பிரிட்ஜ் மின்சக்தி நிலையத்தில் போலந்து நாட்டுக் கொதிகலன்கள் (Polish boilers) நிறுவுவதற்கான ஒப்பந்தமளித்தது, தொடர்பாக வாரிய அலுவலர்களின் மீது குற்றம் சாட்டப்பட்டதையொட்டி ஒழுக்கக் கண்காணிப்பு லஞ்ச ஒழிப்பு இயக்குநரலுவலகம் இ.பி.கோ. வின் கீழும், 1947-ஆம் ஆண்டு லஞ்சத் தடுப்புச் சட்டத்தின் கீழும் வழக்குப்பதிவு செய்துள்ளது. அவ்வழக்கு புலனாய்வில் உள்ளது.

Indian Forest Service

*104. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(*a*) the number of Senior time scale posts of Indian Forest Service in the State Cadre that are vacant as on date;

(*b*) the period for which they are kept vacant;

(*c*) the reasons therefor; and

(*d*) whether there is any proposal to fill up these posts?

இந்திய வனத்துறைப் பணி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இன்றைய நிலவரப்படி மாநிலத் தரத்தில் இந்திய வனத்துறைப் பணியில் காலியாகவுள்ள முதுநிலை காலக்கிரமச் சம்பள ஏற்றப் பதவிகள் (Senior time-scale posts) எத்தனை?

(இ) அவை எவ்வளவு காலமாக காலியாக உள்ளன?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

(எ) இந்தப் பதவிகளை நிரப்பும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) பதினொன்று.

(இ) 1-10-66 முதல் பதினொரு பதவிகள், 21-3-70 முதல் மூன்று பதவிகள்.

(உ) மாநில வனத்துறைப்பணி அதிகாரிகளின் பதவி உயர்வுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 13 பதவிகள் இது காறும் நிரப்பப் படவில்லை. இந்திய வனத்துறைப் பணிக்கு (IFS) பதவி உயர்வு பெறுவதற்கான மாநில வனத்துறைப் பணி அதிகாரிகளின் தேர்வுப்பட்டியல் இந்திய அரசால் இன்னும் அனுப்பப்படவில்லை. ஒரு இந்திய வனப் பணி அதிகாரியை இள நிலையிலிருந்து முதுநிலைக்கு 21-3-70 முதற்கொண்டு பதவி உயர்த்துவது குறித்து அரசு பரிசீலித்துவருகிறது.

(எ) ஆம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: 1967 முதல் 1969 வரை இந்த 14 பதவிகளும்— ஏறக்குறைய 3 ஆண்டு காலமாக— நிரப்பப்படாமல் இருப்பது சரியா என்பதை அரசு சிந்திக்குமா? அதோடு உடனடியாக இப்படிப்பட்ட இடங்களை நிரப்ப இனியாவது அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[9th September 1970

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : ஐ. எப். எஸ். என்பது நேரடியாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய பதவியாகும். அதோடு இலாகாவில் வேலை செய்பவர்களில் சிலரும் அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருக்கிறது. அதற்காக 13 பதவிகள். முதலில் ஐ. எப். எஸ். பதவி ஏற்படுத்தப்பட்ட பிறகு, தமிழ் நாட்டுக்கு அந்தக் குழு 1969—ல் தான் வந்தது. அவர்கள் இங்கே வந்து பரிசீலனை செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். மத்திய அரசின் மூலமாக அந்தக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் யார் யார் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற பட்டியல் வந்த பிறகு, இந்த இடங்கள் நிரப்பப்படும்.

*105. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) the number of Officers belonging to the Indian Forest Service in State Cadre working in Senior time scale posts drawing Junior time scale of pay ; and

(*b*) how long they have been working and the reason therefor ?

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மாநிலத் தரத்தில், இந்திய வனத்துறைப் பணியில் இளநிலைக்குரிய காலக்கிரமச் சம்பள ஏற்றப் பதவிச் சம்பளத்தைப் பெறும் முதுநிலை காலக்கிரமச் சம்பள ஏற்றப் பதவிகளிலுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை என்ன ?

(இ) அவர்கள் எவ்வளவு காலமாகப் பணி புரிகின்றனர் ? அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) மூன்று.

(இ) முறையே 2-4-69, 25-9-69, 1-6-70 முதல். ஐ.எப்.எஸ். பதவித்தரத்தில் நேரடி நியமனம் செய்யவேண்டிய ஒரு முதுநிலைப் பதவி மட்டுமே 21-3-70 முதல் காலியாக உள்ளது. இளநிலையில் நேரடி பதவி நியமனம் பெற்ற ஒரு ஐ. எப். எஸ். அதிகாரிக்கு முதுநிலை அதிகாரியாக 21-3-70 முதல் பதவி உயர்வு அளிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

THIRU G. SWAMINATHAN : I believe these people are drawing the junior time scale of pay and work in senior time scale posts. Should it not be possible for the Government to fill up these posts early and pay the senior time scale of pay, Sir ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : ஒன்றிற்கு இப்போது உத்தரவு போடுகிற தருவாயில் இருக்கிறது. இரண்டையும் பார்த்துப் பரிசீலனை செய்யப்படும்.